ல ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

கள்: பன்னிரண்டு

வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 18 வெள்ளிக்கிழமை (01.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133



SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812


# பார் நிறுத்தத்தை ஏற்படுத்த
# ர்வதேச சமூகம் இறுதி முயற்சி



## அகாஷி இலங்கை விரைவு

(கொழும்பு)

போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான இறுதிக்கட்ட முயற்சியாக இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இன்று இலங்கைக்கு வருகிறார். இவரது பயணத்தின் பலனாக இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதாக சர்வதேச சமூகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வழங்கல் ஒத்திவைப்பு

(வாஷிங்டன்)

மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மேலும் அத்தியாவசிய உதவிகளை செய்விக்க இலங்கை அரசாங்கத்தை தூண்டும் பொருட்டு சர்வதேச நாணய நிதியத்தின் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையினை காலம் தாழ்த்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பராக் ஓபாமாவின் நிர்வாக குழுவினர், சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்களுடன் கடந்த வாரம் கலந்துரையாடலை மேற்கொண்ட போது இது தொடர்பில் தமது (12ஆம் பக்கம் பார்க்க)

## னி மக்களின் நிலை குறித்து ழ்க் கட்சிகள் ஆராய்வு

(கொழும்பு)

ரி நிலையங்களிலுள்ள மக்க படை வசதிகள் தொடர்பாக தமிழ் ட்சிகள் கூடி ஆராய்ந்துள்ளன.

ரசியல் கட்சிகளான தமிழ்த் தேசி மப்பு, தமிழர்விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டத்தில் ஆராயப்பட்ட விபரங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சரணடைவதற்கு 6 நாட்கள் மட்டுமே உள்ளன

### ஜனாதிபதி உரை

(கொழும்பு)

போர்நிறுத்தம் ஒன்றுக்குச் செல்வதற்கு எமக்கு நேரமில்லை. அதனை நாம் இப்போது செய்யப்போவதில்லை என அறிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமது ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு ஆயுதப்படைகளிடம் சரணடைய விடுதலைப் புலிகளுக்கு ஐந்து அல்லது ஆறு நாட்கள் மட்டுமே உள்ளன எனவும் தெரிவித்தார். எம்பிலிப்பிட்டியவில் நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)



## மோதல் தவிர்ப்பு பிரதேசம் வன்னிப் பகுதியில் இல்லை

### ஜோன் ஹோம்ஸ் நியூயோர்க்கில் தெரிவிப்பு

(நியூயோர்க்)

வன்னியில பாதுகாப்புப் பிரதேசம் அல்லது மோதல் தவிர்ப்புப் பிரதேசம என்று ஒன்று அங்கு இல்லை. அது கனரக ஆயுதங்களின் தாக்குதல் இடம்பெறும் தளமாகவே உள்ளது என ஐ.நா. சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உதவிச் செயலர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் பாரிய ஆபத்தில் சிக்கியுள்ளனர். அவர்கள் எறிகணைகள் மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்–திருமலை கப்பல் சேவை நாளை

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை சனிக்கிழமை நடைபெறும் என அரசாங்க அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார். யாழ்.மாவட்ட செயலகத்தில் ஏப்ரல் மாத 8–வது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினை பெற்றுக் கொண்டவர்களும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப்பவர்களும் நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ச)

## மேஸ்வரனின் போராட்டம் காலிகமாக நிறுத்தம்

(லண்டன்)

ானிய நாடாளுமன்ற சதுக்கத்தில் 4 நாட்களாக பரமேஸ்வரனால் டுக்கப்பட்ட சாகும் வரையிலான நிலை போராட்டம் பிரித்தானியா த்தின் உறுதி மொழியுடன் நாடா உறுப்பினர் சிமென் ஹக்ஸ் பழச் டுக்க (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் வெற்றி பெற்றாலும் சமாதானத்தை இழக்க நேரிடும்

### பிரி. வெளியுறவுச் செயலர் விளக்கம்

(கொழும்பு)

தற்பொழுது தொடரும் மோதல்களில் இலங்கை அரசு வெற்றி பெற்றாலும் அது சமாதானத்தை இழந்து விடுமென பிரித்தானிய வெளிவிவகாரச் செயலர் டேவிட் மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயப்பகுதியில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்துவதில்லை என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் (12ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் நாளை தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு முழுவதும் நாளை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (ச)

## பார் நிறுத்தமும் ஏற்படுத்தப்படாது னியாளர்களுக்கும் அனுமதி கிடையாது"



### இராஜதந்திரிகளிடம் கோத்தபாய திட்டவட்டம்

(கொழும்பு)

நிறுத்தம் ஒன்றை ஏற்றுக் கொள் துமில்லை, போர் நடைபெறும் பகு விப் பணியாளர்களை அனுமதிக் தும் இல்லை எனத் திட்டவட்டமாக திருக்கும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடனோ சடலமாகவோ பிடிபடும் வரையில் தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை எனவும் உறுதியாக கூறியிருக்கிறார்.

குறுகிய ஒரு நாள் பயணத்தினை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு வந்த பிரித்தானியாவின் வெளிவிவகார செயலாளருடனும் (02ஆம் பக்கம் பார்க்க)

வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நலன்புரி நிலையங்களில் உள்ளோருக்கு மே மாத நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான மே மாதத்திற்கான உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்ட செயலகத்தில் உள்ள உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் நேற்று முதல் குறிப்பிட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே வழங்கற் கட்டளைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ. சங்கங்கள் மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் வழங்கற் கட்டளையை உடன் பெற்று எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருட்களை முழுமையாகப் பெற்று விநியோக நடவடிக்கையினை அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (சி)

## கரித்தாஸ் நிறுவனத்தினால் உப உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களிற்கான உப உணவு விநியோகம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை 8 முகாம்களுக்கு தினமும் உப உணவு வழங்கப்பட்டு வந்ததாகவும் இன்று முதல் 12 முகாம்களுக்கு வழங்கப்பட உள்ளதாக கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இம்மக்களுக்கு உணவு விநியோகத்துக்கு நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் நிதி செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்நிறுவனத்தினால் கைதடி நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு 68 கொட்டகைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இக் கொட்டகைகளில் 214 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-14)

## சங்குப்பிட்டியூடான வாகனப் பயணத்துக்கு இரும்புப்பாலம் அமைக்க அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி ஊடாக வாகனங்கள் செல்வதற்கு ஏற்ற வகையில் இரும்புப்பாலம் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனையடுத்து ஆரம்பக்கட்ட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாவற்குழி,கேரைதீவு ,மன்னார் ஊடாகச் செல்லும் ஏ 32 வீதியில் படகுச் சேவை நடைபெறும்.சங்குப்பிட்டியூடாக வாகனங்கள் செல்லக்கூடிய வகையில் இரும்புப்பாலம் ஒன்றை அமைக்க,நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

இதற்காக 150 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியம் ஊடாக அந்தத் தொகையை ஒதுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## இலவச யோகாசன வகுப்புக்கள்

(நல்லூர்)

பெண்கள்,ஆண்கள் மற்றும் நோயாளர்களுக்கான இலவச விசேட யோகாசன வகுப்புக்கள் நாளை காலை 8 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.விஜயகுமார் அறிவித்துள்ளார்.

இப் புதிய வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புவோர் நாவலர் மணி மண்டபத்தில் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-18)

## ஜெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

(யாழ்ப்பாணம்)

'தீமையை நன்மையினால் வெல்லலாம்' என்ற பொருள் கொண்ட மாநாடு நாளையும் நாளை மறுதினமும் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.40 மணிக்கு ஆரம்பமாகி 3.55 வரை நடைபெறும்.

எல்லாத் தீமைக்கும் முடிவு விரைவில் என்ற பொதுப்பேச்சு ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என செய்திச் சேவையாளர் த. முத்துலிங்கம் தெரிவித்தார். (ச)


### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை கிழக்கு, மாவடிச் சந்திக்கு அண்மையாக வீடு, கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தரகர்கள் தேவையில்லை நேரில் வரவும்.

தொடர்பு:- 0778693231
0778435127

(C-2433)


# குறைகேள் அரங்கு

## விஞ்ஞானத்துறை மாணவர்களை அதிகரிப்பது இன்றைய கட்டாய தேவை

பிரதம ஆசிரியர்,
வலம்புரி.

தங்களின் 24.04.2009 திகதி வலம்புரி பத்திரிகையில் கௌரவம் பெறும் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை க.பொ.த. (உ/த) 2008 மாணவர்களின் பெயர் விபரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அப்பட்டியலில் குறைந்தது 2 ஏ பி பெறுபேறுகளை அதாவது பல்கலைக்கழக அனுமதி பெரும்பாலும் கிடைக்கக்கூடிய மாணவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டிருந்தன.

தங்களின் இம் முயற்சி எமது மாணவர்களின் கல்வியில் அக்கறை உள்ளவர்களின் கவனத்தை நிச்சயமாக ஈர்த்திருக்கும். இப்பட்டியலைப் பிரசுரித்தமைக்குத் தங்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

உங்கள் பிரசுரத்திலிருந்து பின்வரும் தகவலைப் பெறக்கூடியதாக இருந்தது. மிகப் பிரபல்யமான கல்லூரிகளைக் கொண்ட யாழ். கல்விவலயத்தில், கணிதத்தில் 25 மாணவர்களும் உயிரியலில் 19 மாணவர்களும் வர்த்தகத்தில் 21 மாணவர்களும் கலையில் 116 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

மொத்தமாக 181 மாணவர்களில், 44 மாணவர்களே கணிதம் மற்றும் உயிரியலுக்குத் தெரிவாகியுள்ளனர். அதாவது 24 வீதமான மாணவர்கள்.

பொதுவாக பெரும்பாலான கல்லூரிகளின் கணித,உயிரியல் பெறுபேறுகள் ஏமாற்றம் தருவனவாக அமைந்துள்ளன.

இத்தனைக்கும் இத்துறைகளுக்கு அனுமதி, சிறந்த க.பொ.த (சா/த) பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கே வழங்கப்படுகின்றன.

கணித,உயிரியல் துறைகளில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஓரளவான பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களுக்கும் நல்ல தொழில்வாய்ப்பும் பல்கலைக்கழக அனுமதி போன்ற சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு.

எனினும் க.பொ.த (உ/த)இல் 3 ஏ பெறுபேறுகளை பெற்ற கலைத்துறை மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிகூட நிச்சயமாகக் கிடைக்குமெனக் கூறமுடியாத நிலை உண்டு.

நல்ல பெறுபேறுகளை க.பொ.த. (உ/த) இல் கலைப் பாடங்களில் எடுக்கும் மாணவர்களில் பலர் கணித,உயிரியல் துறைகளில் சேர்ந்து கற்றிருந்தால் அங்கும் நன்றாகச் செயற்பட்டு மேல் நிலைக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கும்.

பல மாணவர்கள் தகைமை இருந்தும் க.பொ.த.(உ/த)இல் கணித,உயிரியல் துறைகளுக்கு அனுமதி பெறுவதற்கு சந்தர்ப்பம் இல்லாது போகின்றது.

இத் துர்ப்பாக்கிய நிலைக்கு பின்வரும் காரணிகள் துணை போகின்றன என கூறலாம்.

*1.க.பொ.த (சா/த) பெறுபேறுகள் வெளிவர முன்பே க.பொ.த (உ/த) வகுப்புக்களை தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்து மாணவர்களை நிறுவனங்களின் தேவைக்கேற்ற பாடத் துறைகளை தெரிவு செய்யத்தூண்டல்.*

*2.கல்லூரிகள் கணித,உயிரியல் துறைகளுக்கான அனுமதி நிபந்தனைகளை உயர்த்துதல்.*

*3.பெற்றோரின் அறிவீனம்.*

*4.கணித,உயிரியல் துறைகள் இல்லாத அதாவது 1 C பாடசாலைகள் சில தங்கள் பாடசாலையிலிருந்து சிறந்த க.பொ.த (சா/த) பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை தங்கள் பாடசாலையில் உயர்தரம் கற்க நிர்ப்பந்தித்தல்.*

எனவே இன்றைய தேவை விஞ்ஞான துறை மாணவர்களின் தொகையினை அதிகரித்து அவர்களை இத்துறையில் தேர்ச்சி பெற வைப்பதே ஆகும்.இதன் மூலம் எமது மாணவர்களின் எதிர்காலத்தினைப் பிரகாசம் ஆக்கலாம்.

*அ.பஞ்சலிங்கம்*
*முன்னாள் அதிபர்*

## போர் நிறுத்தமும் ஏற்படுத்தப்படாது...

பிரான்ஸின் அமைச்சருடனும் வெளிவிவகார அமைச்சில் தனித்தனியாக நடத்திய பேச் சுக்களின் போதே கோத்தபாய ராஜபக்ஷ அதனைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

முப்பது வருட காலத்துக்கு பின்னர் இறுதியாக பிரபாகரனையும் ஏனைய புலிகளின் தலைவர்களையும் உயிருடனோ அல்லது உடலங்களாகவோ கைப்பற்றுவதற்கான தருணம் வந்திருக்கிறது எனச் சுட்டிக்காட்டிய கோத்தபாய ராஜபக்ஷ, அது வரையில் போரை அரசாங்கம் நிறுத்தப் போவதில்லை எனவும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் டேவிட் மிலிபான்ட், போர் நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனவும் உதவிப் பணியாளர்கள் போர்ப் பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மக்களின் தேவைகளை கவனிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த போதே விடுதலைப் புலிகள் அமைப்பை முழுமையாக அழித்து அதன் தலைவர்களை உயிருடனோ, சடலமாகவோ கைப்பற்றும் வரையில் போரை அரசாங்கம் நிறுத்தப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

இந்த போரில் படையினரும் பொது மக்களுமே உயிரிழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். அதனால்தான் விடுதலைப் புலிகள் அமைப்பை அழிப்பது என அரசாங்கம் தீர்மானித்தது. போர்பகுதியில் இருந்து பிரபாகரனையும் புலிகளின் மற்றைய உயர் தலைவர்களையும் பாதுகாத்து வெளியே கொண்டு வருவதற்காகத்தான் மனிதாபிமானஅக்கறைகளை சிலர் வெளிப்படுத்துகின்றனர்.

போர் நிறுத்தம் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்று சேர்வதற்கும் பலம்பெறுவதற்குமே வழிவகுக்கும்.

இந்த போரை நிறுத்தக் கூடிய ஒருவர் இருக்கிறார் என்றால் அது ஜனாதிபதி மட்டும்தான். பிரபாகரனையும் புலிகளின் ஏனைய தலைவர்களையும் கைது செய்யுமாறு அல்லது அழித்து விடுமாறு அவர் இராணுவத்திற்கு உத்தரவிட்டிருக்கின்றார். ஜனவரி மாதத்துக்கு பின்னர் இரண்டு லட்சம் மக்களை விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்து படையினர் மீட்டுள்ளனர். இதற்காக படையினர் ஒரு துப்பாக்கி சூட்டைக் கூட நடத்தவில்லை. ஏனையவர்களும் விரைவில் மீட்கப்படுவார்கள் என கோத்தபாய தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட மிலிபான்ட், இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தில் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதாக குறிப்பிட்டார். விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் பொய் பிரசாரத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது என தனது குரலை உயர்த்தித் தெரிவித்த கோத்தபாய பி.பி.சி கூட விடுதலைப்புலிகளின் பிரசாரங்களை அதனை உறுதிப்படுத்தாமல் அப்படியே பயன்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதற்கு பதிலளித்த மிலிபான்ட், பி.பி.சியின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்து தான், இதனைத் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டதுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பு வலயத்தில் இருந்து இது தொடர்பாக நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்திருப்பதாகக் கூறினார்.

பிரித்தானிய தூதுக்குழுவினருடனான சந்திப்பையடுத்து பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னரை அதே இடத்தில் சந்தித்த பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய பேச்சுக்களை நடத்தினார். மிலிபான்டின் அணுமுறையை விட குஷ்னரின் அணுகுமுறை அதிகளவுக்கு இராஜதந்திரமானதாக இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் பொது மக்கள் வசிக்கும் பகுதிக்கு ஐ.நா செல்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த கோத்தபாய அந்தப் பகுதியில் யாருக்குமே பாதுகாப்பு இல்லை. யாருடைய பாதுகாப்பையும் அரசாங்கத்தினால் உறுதிப்படுத்த முடியாது எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் அந்த பகுதிக்கு செல்வதற்கு தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார். அங்கு செல்வதில் உள்ள ஆபத்தை எதிர்கொண்டு அங்கு செல்வதற்கு தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கு சிரித்துக் கொண்டே பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் விரக்தியடைந்த நிலையில் இருக்கின்றது. இந்த நிலையில் அவரையும் (பிரான்ஸ் அமைச்சரையும்) விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாகக் பிடித்து விடலாம் என எச்சரித்தார்.

அதனையிட்டுக் கூட நான் கவலைப்படவில்லை என இதற்குப்பதிலளித்த பிரான்ஸ் அமைச்சர் குறிப்பிட்டார்.

(எ-1)

# இன்று ஒரு தகவல்

## மனிதாபிமானம்

வங்காளத்தில் மைக்கேல் மதுசூதனதத் என்ற பெரிய இலக்கிய மேதை இருந்தார்.

''மேகநாவதம்'' என்ற அமர காவியத்தைப் படைத்தவர் அவர். மிகவும் வசதியாகத் தான் இருந்தார்.

வருபவர்களுக்கெல்லாம் இல்லையென்று சொல்லாமல் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

ஒரு சமயம் அவர் வறுமையில் வாடினார். ஒன்றுமில்லாமல் கஷ்டப்பட்டார்.

அந்தச் சமயம் பார்த்து ஒருவர் அவரைத் தேடி வந்தார். இதற்கு முன்னர் இவர் மதுசூதனதத்தை நேரில் பார்த்ததில்லை. படங்களில் தான் பார்த்திருக்கிறார்.

விலையுயர்ந்த ஆடைகள் அணிந்த கோலத்தில் படங்களில் இருப்பார். இப்பொழுது நேரில் பார்க்கும் போது மிகவும் வித்தியாசமாக இருந்தது. அதனால் "நீங்கள் தானே மைக்கேல் மதுசூதனதத்?" என்று கேட்டு விட்டார்.

"ஆமாம்! நான்தான் மைக்கேல். நீங்கள் படங்களில் பார்த்தது கடந்தகால மைக்கேல். இப்பொழுது பார்ப்பது நிகழ்கால மைக்கேல். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

''ஐயா! உங்களிடம் யார் வந்தாலும் வெறுங்கையுடன் அனுப்ப மாட்டீர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இப்பொழுது நீங்களே பண நெருக்கடியில் இருக்கிறீர்கள் என்று தெரியாமல் வந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர் திரும்பினார்.

"கொஞ்சம் நில்லுங்கள் என்னுடைய கஷ்டத்தைப் பற்றி பாராமல் உங்களுடைய கஷ்டம் என்னவென்று சொல்லுங்கள்" என்றார் இவர்.

"ஐயா... வீட்டில் வறுமை, திருமண வயதில் ஒரு பெண், தாங்கமுடியாத சுமை" என்று கண்ணீர் விட்டழுதார்.

உடனே மதுசூதனதத் தன்னுடைய கிழிந்த சட்டைப் பையில் கையை விட்டு 500 ரூபாவை எடுத்து அந்த ஏழையிடம் கொடுத்தார். அது சரி.. இவருக்கு ஏது இந்த 500 ரூபாய் தெரியுமா?

சிறிது நேரத்துக்கு முன்னர் தான் ஒரு புத்தகக் கம்பனிக்காரர் இந்தக் கவிஞரின் வறுமையைக் காணச் சகிக்காமல் ஒரு 500 ரூபாவை முன் பணமாக கொடுத்து... ஒரு புத்தகம் எழுதிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

இவரும் சரியென்று சொல்லியிருந்தார். வந்தவருக்கு விஷயமெல்லாம் தெரியாது. இவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு நா தழுதழுக்க ஆசி வழங்கி விட்டுப் போய்விட்டார்.

நடந்தது முழுவதையும் கவிஞரின் மனைவி உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு ஐரோப்பியப் பெண்மணி.

கவிஞர் மெதுவாக திரும்பி மனைவியைப் பார்த்தார். அவர் கந்தல் ஆடையுடன் கையில் ஒரு கசங்கிய காகிதம் வைத்திருந்தார்.

அதில் வீட்டுக்கு வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியல், மகனுக்கு மருந்து, வீட்டிலுள்ளவர்களுக்கான துணிமணி எல்லாம் எழுதியிருந்தது. மனைவியிடம் வந்தார்.

நமது அன்பு மகன் ஜுரத்தால் படுத்த படுக்கையில் இருக்கிறான். நாமோ கந்தல் ஆடையில் இருக்கிறோம். நான்கு பேருக்கு முன்னால் கௌரவமாக நடமாட முடியாத நிலை.

இப்படிப்பட்ட நிலையில் முன்பின் யோசிக்காமல் இப்படி விவேகமில்லாமல் நான் நடந்திருக்கக் கூடாதுதான் இருந்தாலும் என்ன செய்வது?

எனக்குள்ளிருக்கும் கவியுள்ளம் என்னை ஆட்டிப்படைக்கிறது. இப்படி யாராவது கஷ்டப்படுவதைப் பார்த்தால் இந்தப் பாழும் நெஞ்சம் பதறித் துடிக்கிறது. என்னை மன்னித்துக் கொள் என்று மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

வெளிநாட்டு மங்கையாக இருந்தாலும் அந்தப் பெண் தனது கணவரின் கால்களை தொட்டு வணங்கி விட்டு,

"இது நாள் வரைக்கும் அறிவாற்றல் மிகுந்த ஒரு கவிஞராகத்தான் உங்களை நான் பார்த்தேன். உங்களுடைய மனிதாபிமானம் எவ்வளவு விசாலமானது என்பதை இன்று தான் தரிசித்தேன்.

நான் அந்நிய நாட்டில் பிறந்தவள். கர்ணனைப் பற்றியும் ஹரிச்சந்திரனைப் பற்றியும் நீங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்றைக்கு அவர்களை நேருக்கு நேர் பார்த்துவிட்டேன்" என்றார்.

சிறிது நாட்களுக்கு முன் நான் ஒரு இலக்கிய கர்த்தாவை சந்தித்தேன். அவர் மிகவும் மோசமான நிலையில் இருந்தார் கிழிந்த சட்டை. எண்ணெய் தடவாத தலை.

"என்ன சேர்... இப்படி ஆகிவிட்டீர்கள்?" என்று கேட்டேன்.

"ஒரு புத்தகம் எழுதி சொந்தச் செலவில் வெளியிட்டேன். இருந்த பணம் முழுவதும் செலவாகி விட்டது. அதுதான் இப்படியாகி விட்டேன்" என்றார்.

"என்ன புத்தகம் அது? தலைப்பு என்ன?" என்று கேட்டேன்.

"பணம் சம்பாதிப்பது எப்படி?" இதுதான் தலைப்பு என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான போட்டி முடிவுகள் பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கழகங்களின் விபரம் வருமாறு,

**வலைப்பந்து**

மனோகரா, சிவகுமரன், பொம்மேஸ்.

**எல்லே - ஆண்**

மனோகரா, டைமன்ஸ், இமையாணன் மத்தி.

**எல்லே - பெண்**

மனோகரா, இமையாணன் மத்தி, டைமன்ஸ்.

**கபடி - ஆண்**

பொம்மேஸ், கலைமதி, இமையாணன் மத்தி.

**கபடி - பெண்**

பொம்மேஸ், மைக்கல்.

**கிரிக்கெட் - ஆண்**

கலைமகள், நவஜீவன்ஸ், நவசக்தி.

**கிரிக்கெட் - பெண்**

மனோகரா, டைமன்ஸ், மைக்கல்.

**கரப்பந்து - பெண்**

சிவகுமரன்ஸ், இமையாணன் மத்தி, மைக்கல்.

**கரப்பந்து - ஆண்**

சிவகுமாரன்ஸ், நவஜீவன்ஸ், திருவள்ளுவர்.

**உதைப்பந்து - பெண்**

பொம்மேஸ், மனோகரா, டைமன்ஸ்.

**உதைப்பந்து - ஆண்**

டைமன்ஸ், கலைமதி.

**பூப்பந்தாட்டம் - பெண்**

பொம்மேஸ், மைக்கல், டைமன்ஸ்.

**பூப்பந்தாட்டம் - ஆண்**

ஸ்பேஸ், கலட்டி, மைக்கல்.

**தடகளப் போட்டி - பெண்**

இமையாணன், பொம்மேஸ், அண்ணாசிலையடி மத்தி.

**தடகளப்போட்டி - ஆண்**

நவஜீவன்ஸ், மனோகரா, இமையாணன் மத்தி, டைமன்.

அனைத்துப் போட்டிகளின் அடிப்படையில் பொம்மேஸ் கழகம் முதலாம் இடத்தையும், மனோகரா இரண்டாம் இடத்தையும், இமையாணன் மத்தி, டைமன் ஆகிய கழகங்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ஓ)

# பாடசாலை ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள் வழங்க அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டை தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில வருடமாக பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து பாடசாலை ஆசிரியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பயிற்சித் திட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்றது.

நாட்டின் பாடசாலை கட்டமைப்பில் தகவல் தொழில்நுட்ப துறையை விருத்தி செய்வதற்கான செயற்திட்டங்களை கல்வியமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

தேசிய தகவல் தொழில்நுட்ப வருடத்தில் இந்த நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 50 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் சர்வதேச புலமைப் பரிசில்களை வழங்கும் செயற்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதுடன் இருபது இலத்திரனியல் கிராமங்கள் உருவாக்கப்பட்டு தகவல் தொழில் நுட்ப அறிவை போதிக்கும் செயற்திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 500 பாடசாலைகளுக்கு கணனி வலயமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதுடன் 2 ஆயிரத்து 800 ஆய்வு கூடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவிக்கின்றது. (ஓ-4)

## இராசி பலன்

*01.05.2009*
*(சித்திரை 18, வெள்ளிக்கிழமை)*
*சப்தமி முன்னிரவு 6.42 மணிவரை*
*பூசம் பின்னிரவு 3.41 மணிவரை*
*இராகுகாலம் 10.27-11.57 மணிவரை*
*சுபநேரம் 5.57-7.27 மணிவரை*
*உலக தொழிலாளர் தினம்*

| | |
|---|---|
| மேடம் | தொழில் சிந்தை, சுபசெலவு, வாகன சுகம், புதிய முயற்சி. |
| இடபம் | அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், தனலாபம், பிரயாண நன்மை. |
| மிதுனம் | விதண்டாவாதம், தன்விரயம், காரிய தாமதம், பெரியோர் உதவி. |
| கடகம் | நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம், சிந்தனை மிகுதி. |
| சிங்கம் | உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், தெய்வ சிந்தை, சுப செலவு. |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், மன மகிழ்ச்சி. |
| துலாம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, சுபசெய்தி, காரிய நன்மை. |
| விருச்சிகம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், சரீரப் பிரயாசை, பிரயாணம், அஜீரணக் கோளாறு. |
| தனுசு | மரியாதைக் குறைவு, எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசன சுகம். |
| மகரம் | தெய்வ தரிசனம், திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | தேகநலன், காரிய சித்தி, நல்ல செய்தி, தெய்வ தரிசனம். |
| மீனம் | காரிய இடையூறு, குடும்பக் கவலை, பணக்குறைவு, வியாபார சிந்தை. |

வளவன்

# "நாவலர் சோலை" முன்பள்ளி பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் ''நாவலர் சோலை'' முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறார்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசு பெறுவோர் விபரம் வருமாறு,

**A பிரிவு பேச்சு (5 வயது) - தமிழ், ஆங்கிலம்**

மு. துஷாயினி, இ. பிரணவி, ல. நிலவன்.

**B பிரிவு (4 வயது) - ஆத்திசூடி**

சி. டினோஜன், சு. தனுஸ்ராஜா, ம. பிரியங்கா.

**C பிரிவு (3 வயது) - ஆத்திசூடி**

ந. மேகலா, சி. சங்கரி.

(ஓ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 70 |
| தக்காளி | 200 | 220 | 150 |
| அவரை | - | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 100 |
| கோவா | 20 | 30 | 25 |
| கரட் | 40 | 40 | 40 |
| பூசணி | 20 | 40 | 20 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 30-40 | 30-35 | 40 |
| பெரிய வெங்காயம் | 140 | 120-140 | -- |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 200 | 200 | -- |
| போஞ்சி | - | - | - |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 25 |





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கிறிஸ்தவர்களின் புனித திருநாட்களில் ஒன்றான ஈஸ்ரர் தின சிறப்பு நிகழ்வாக நடைபெற்ற " துயரத்தின் விளிம்பில்" நாடகத்தின் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்:-கிருஸ்ணா)

## கொமிசியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட புனித–மரியாயின் சேனை மாதாந்த கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 3ஆம்திகதி காலை 10 மணிக்கு யாழ்.மறைக் கல்வி நடு நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆன்மீக இயக்குநர் அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. சகல பிரசீடியங்களையும் தவறாது பங்குபற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ–72)

## மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் இன்று புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் கட்சியின் வட பிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், ஆசிரியர் தொழிற் சங்கத் தலைவர் இ.தவராசா, அரசியல் குழு உறுப்பினர் க.தணிகாசலம், தொழிற் சங்கத்தலைவர் கா.பஞ்சலிங்கம், வாலிபர் முன்னணி தலைவர் பொ. முருகேசு, புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக தலைவர் கு.மகாதேவன், முன்பள்ளி ஆசிரியர் திருமதி உ.லதா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஓ–6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் இன்று கட்சி காரியாலயப் பணிமனையில் கட்சியின் யாழ்.மாவட்டத் தலைவர் த.தேவகுலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கட்சியின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொகுதி அமைப்பாளர் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஓ–6)

## நலன்புரி நிலையத்தில் அலுவலர்களுக்கான தளபாட வசதி இன்மையால் சிரமம்

கைதடி நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள கிராம அலுவலர்கள், வைத்திய அதிகாரிகள், தபால் உத்தியோகத்தர்கள் தமது சேவையை வழங்குவதற்கு போதிய தளபாடம் இன்றி சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நலன்புரின் நிலையத்தில் ஒருவர் மாத்திரம் கடமையாற்றுவதற்கான தளபாடம் மட்டும் காணப்படுகின்றது. இதனால் மற்றைய உத்தியோகத்தர்கள் நின்ற நிலையில் மக்களுக்காக சேவையாற்றுகிறார்கள்.

இதனால் மக்களுக்கு சேவையை திறம்பட மேற்கொள்ள முடியாதிருப்பதாக அவ் அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே உரிய அதிகாரிகள் கவனமெடுத்து தளபாட வசதிகளை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றனர். (ஓ–21)

## யாழ்.மாவட்டத் தொழில் அலுவலகத்தில் ஊழியர் சேமலாப நிதியினை மீளப் பெறல்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதிப் பணத்தினை மீளப் பெறுவதற்கு தகுதி இருந்தும், அதனை மீளப்பெறாமல் உள்ளமை தெரிய வந்துள்ளது.

தொழில் நிலையங்களில் வேலை செய்து உரிய வயதினை அடைய முன்னரே வேலையை விட்டவர்கள் தாம் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர் என்பதனை மறந்து மீளப் பெறாமல் விடுகின்றனர். இவ்வாறான அங்கத்தவர்கள் தம்மிடம் அதற்கான எவ்விதமான சான்றுகளும் இல்லையே என மனம் தளராமல் யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு வருகை தந்தால் அலுவலகம் அவர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாக உதவித் தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள், தமது ஊழியர் சேமலாப நிதியினை பின்வரும் சந்தர்ப்பங்களில் மீளப் பெற முடியுமெனவும் அறிவித்துள்ளார்.

★பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும் பூர்த்தியடைந்து வேலையில் இருந்து ஓய்வுபெறும் போது பெற்றுக் கொள்ள முடியும்.

★பெண்கள் திருமணம் செய்யும் சந்தர்ப்பங்களில் திருமணப் பதிவு நடைபெற்ற தினத்திற்கு முன்னுள்ள மூன்று மாத காலத்திலும் திருமணப் பதிவு நடைபெற்ற திகதிக்கு பின்னுள்ள 5 வருட காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் வேலையில் இருந்து விலகும் போது ஊழியர் சேமலாப நிதியினை மீளப் பெற முடியும்.

★ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர் ஒருவர் ஓய்வூதிய உரித்துடைய அரச பதவி ஒன்றில் இணையும் போது ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெற முடியும்.

★ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் இயலாமையடையும் போது உரிய வயதினை அடைய முன்னர் மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியினை மீளப் பெற முடியும்.

மேற்கூறிய நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றின் கீழ் ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெற தகுதியுடையவர்கள் வீரசிங்கம் கட்டடத்தின் 4 ஆம் மாடியில் உள்ள தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு ஊழியர் சேமலாப நிதியை மீளப்பெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றார். (ஓ)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் சம்பிய னாகத் தெரிவு செய்யப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரி அணி வீராங்கனைகளு டன் கல்லூரி அதிபர் திருமதி சிராணிமில்ஸ், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி பணிப்பாளர் மு.நடராசா, கல்லூரி விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் ப.தர்மகுமாரன் ஆகியோரை படத்தில் காணலாம். (படம்:-கோபி)

## நாட்டுக்கூத்து நிகழ்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான நாட்டுக்கூத்து நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ–4–19)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இதில் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரத உற்சவமும் 9ஆம்திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும்இடம்பெறவுள்ளது. (ஓ–35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ''இதிஹாசங்கள்'' எனும் தொடர் சொற்பொழிவு தமிழ் ஞான வித்தகர் பொன்.சுகந்தனால் நடத்தப்படவுள்ளது. (ஓ–35)

## சைவ சித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச, பால, பண்டிதர் பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொளளுமாறு சைவ பரிபாலன சபை தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)




## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர் (LGA) சங்க பொதுக் கூட்டம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு 56 பழம் வீதி கந்தர் மடத்தில் இடம் பெற உள்ளது.

இதில் சகல பிரதேசசபை, நகரசபை, மாநகர சபை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் கடமையாற்றும் அனைத்து உள்ளூராட்சி உதவியாளர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு சங்கத்தின் உப தலைவர் ஆர். அறிவரசன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் 15 வயதின் கீழ், 19 வயதின் கீழ் பிரிவு பெண்களுக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கும் 15 வயதின் கீழ், 19 வயதின் கீழ் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 8மணிக்கும் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டுக்குழுச் செயலாளர் மு.நடராசா தெரிவித்துள்ளார். (ஓ)

## விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந் துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் இணுவில் விவேகானந்த வீதியைச் சேர்ந்த குணசேகரம் பகீரதன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மோட்டார் சைக்கிளில் அதி வேகமாக கோண்டாவில் வீதியைக் கடந்து செல்லும் வேளை குறுக்கே வந்த மோட்டார் சைக்கிள் மோதி யதில் முகம், கால் ஆகிய பகுதிகளில் சிறு காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ–30)

## கார் -மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கார் -மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சங்கானையைச் சேர்ந்த என்.சுதர்சன்(வயது 21) என்பவர் படுகாய மடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை 6மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் மயிலிட்டிச் சந்தி நோக்கிச் செல்லும் வழியில் காருடன் மோதுண்டு இடதுகால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ–30)

## சவூதி அரேபியாவில் பலியானவரின் சடலம் எடுத்து வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

சவூதி அரேபியாவில் விபத்தில் மரண மான சண்முகம் கங்கா தரனின் பூதவுடல் போக்குவரத்துச் சிரமங்களினால் யாழ்ப்பா ணம் எடுத்து வர தாமதமாவதால் அவரது இறுதிக் கிரியைகள் ஏற்கனவே அறிவித்தபடி 2ஆம் திகதி நடத்தப்பட முடியாதுள்ள தாகவும் அதுபற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்துள் ளனர். (ஓ)


## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற

## யாழ்.கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -26.04.2009

### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



433


434


435


436


437

# தொடர்ந்து 3 மாணவர்கள் கடத்தல்; மட்டக்களப்பு கல்விச் சமூகம் அச்சத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களில் மூன்று மாணவர்கள் மர்மமான முறையில் கடத்திச் செல்லப்பட்டிருப்பது அங்குள்ள மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அடுத்தடுத்து மூன்று மாணவர்களும் காணாமல் போயிருப்பதால் இவர்கள் அடையாளம் தெரியாத குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என பெற்றோரும் மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக மாணவர்களின் மறியல் போராட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.ஏறாவூர் விபுலாணந்த மகாவித்தியாலய மாணவன் வள்ளுவன் விஜயன் (வயது 15) கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் காணாமல் போயுள்ளார்.

வீட்டில் இருந்து மருத்துவமனைக்குச் சென்ற இந்த மாணவன் இதுவரையில் வீடு திரும்பவில்லை. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தும் மேலதிக தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

இதேவேளை, கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஏரம்பமூர்த்தி ஜனார்த்தனம் (வயது 12) என்ற மாணவன் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணாமல் போயுள்ளார். பாடசாலை முடிந்து தனியார் வகுப்புக்குச் சென்ற இந்த மாணவனைப் பற்றி கடந்த இரு நாட்களாக எந்தத் தகவலும் இல்லை.

இதனைவிட கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலய 3 ஆம் தர மாணவி சதீஷ்குமார் தினுஷிகா (வயது 9) என்பவரும் காணாமல் போயுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சென்ற இந்தச் சிறுமியை பாடசாலை முடிவடைந்த போது அடையாளம் தெரியாத யாரோ வந்து அழைத்துச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயர்கல்வி ஆசிரியரான இந்தச் சிறுமியின் தந்தை சதீஷ்குமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆயுதக்குழு ஒன்றினால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இந் நிலையில் சிறுமியும் காணாமல் போயிருப்பதால் குடும்பத்தினர் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளார்கள்.

அடுத்தடுத்து 3 மாணவர்கள் காணாமல் போய் இருப்பதால் இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என பெற்றோரும் ஆசிரியர்களும் கருதுகின்றார்கள்.

இதனால் மட்டக்களப்பு கல்விசார் சமூகத்தினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியும் பீதியும் ஏற்பட்டிருக்கின்றது. (ஓ-6)

# எம் மக்களின் பிரச்சினைகளை எமதரசே தீர்க்கும்

# பிரித்தானியா கவலைப்படத் தேவையில்லை



(கொழும்பு)

அனைத்துலக சூழ்ச்சிக்காரர்கள் இங்கு வருவது பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அல்ல. பிரபாகரனைப் பாதுகாப்பதே, அவர்களின் பிரதானநோக் கமும் தேவை யுமாகும் எனக் குற்றம் சாட்டி யிருக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எமது மக்களுடைய பிரச்சி னைகளை எமது அரசும் இராணு வமும் பார்த்துக்கொள்ளும்.

இதுதொடர்பாக பிரித்தானியா கவலைப் படத் தேவையில்லையென கடுமையாகச் சாடியுள்ளார்.

பிரித்தானிய பிரான்ஸ் மட்டுமல்ல அனைத்துலகமே திரண்டு வந்தாலும் போர் நிறுத்தம் ஒன்றை நாம் ஏற்படுத்தப் போவதில்லை என பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில் கடந்த புதன்கிழமை உரையாற்றியபோது விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில் அவர் முக்கியமாக தெரிவித்ததாவது,

இராஜதந்திரப் போரையும் விடுதலைப் புலிகளுடனான போரையும் இலங்கை அரசாங்கம் சிறப்பான முறையில் நடத்தி வருகின்றது .போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக சில செய்திகள் பரவியுள்ளன. ஆனால் இந்த செய்தியில் எந்தளவுக்கும் உண்மையில்லை. ஏழு நாட்களுக்கு போர் நிறுத்தம் செய்யுமாறு கேட்கும் சதிகாரர்களுக்கு ஒன்றைச் சொல்லி வைக்க விரும்புகின்றேன். ஏழுமணித்தியாலம் கூட நாம் போர் நிறுத்தத்தை செய்யப் போவதில்லை.

இந்த அனைத்துலக சூழ்ச்சிக்காரர்கள் இலங்கைக்கு வருவது பொதுமக்களை பாதுகாப்பதற்கு அல்ல. பிரபாகரனை பாதுகாப்பதே அவர்களின் பிரதான தேவையும் நோக்கமும் ஆகும். பொதுமக்கள் தொடர்பான பிரச்சினையை எமது அரசாங்கமும் இராணுவமும் பார்த்துக்கொள்ளும். இதுதொடர்பாக பிரித்தானியா கவலைப்படத் தேவையில்லை. இப் போரில் மிகப் பெரிய தியாகங்களைச் செய்தே விடுதலைப்புலிகளுக்கு எதிரான பல வெற்றிகளை இராணுவம் பெற்றிருக்கின்றது.

தற்போதைய நிலையில் சுமார் 5 சதுர கிலோமீற்றர் பகுதியிலேயே விடுதலைப் புலிகளும் மக்களும் முடக்கப்பட்டுள்ளார்கள்.

மூன்று நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டிய பிரச்சினைக்கு நிரந்தரமான போர் நிறுத்தம் செய்யவேண்டுமெனக் கேட்பது விடுதலைப்புலிகளை பாதுகாப்பதற்காகவே. இதற்காகவே விடுதலைப்புலிகளை மூன்றாம் தரப்பிடம் சரணடையுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றது. பிரபாகரனை என்ன செய்வது என்பதை நாம் தான் தீர்மானிப்போம். இந்த விடயத்தில் அனைத்துலக சமூகம் தலையிட முடியாது எனவும் விமல்வீரவன்ச தெரிவித்தார். (ஓ-6)


அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்

**மஹோற்சவம்**

**03 ஆம் நாள் மதுரத் திருவிழா (01.05.2009)**

வெண்பா

தீங்கனி கன்னல் தேன்சுவை விரும்பும்
தூங்கு கரமுகத் தெய்வமே தாங்கொணா
துன்பச் சகதியில் சிக்குண்டோம் காண்
திண்ணவனாய் தீராயோ துயர்

எண்சீர்

வேறிணை இல்லாதெம் துணையே
வேழமுகத் தெழில்சேர் தெய்வநிதியே
ஊரினையும் சந்திகளில் கோயிலுகந்து
ஊறுகாவல் தந்திடும் ஊர்த்துவனே
காரறிவுக் கோலமுற்றுக் கதியிழந்தேன்
கணமேதும் உனைநினையாக் காலமதில்
சீரறிவுத் தெளிவுதனை நீயுணர்த்தி
செந்தமிழாலே பாடவைத்த சிவன்மகனே



-அல்வாயூர் சி.சிவநேசன்

(2566)

# இலங்கை வங்கியும் வலம்பு...


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# கௌரவிப்பு வி...

## நெல்லியடி மகாவித்தியாலயம்



செ.செல்வருபன் வர்த்தகம் -3A
சூ.சத்தியவாணி கலை -3A
வி.விமலகுமார் கலை -3A



இ.சுதீபன் கலை -3A
பே.புஸ்பலதா கலை -3A
இ.ராஜ்குமார் கணிதம் -2A,B



த.நிரோஜலா வர்த்தகம் -2A, B
மா.நிரோஜன் வர்த்தகம் -2A, B
சி.தடசயன் கலை -2A, B




தி.சுபோஷன் கலை -2A, B
ஜெ.அபிரா கலை -2A, B
தி.ஜெயராம் கலை -2A, B



க.ஐங்கரன் கலை -2A, B
ச.அருள்ராணி கலை -2A, B
ந.செந்தாழன் கலை -2A, B



இ.ரகுதாஸ் கலை -2A, B
அ.சியாமளன் கலை -2A, B
சோ.மைதிலி கலை -2A, B



சி.சுரேஸ் கலை -2A, B
அ.ஜெயதீபன் கலை -2A, B
ஜெ.கீர்த்தனன் கலை -2A, B

## தேவரையாளி இந்துக் கல்லூரி



எம். சுரேந்தர் கலை -3A
ஏ.விமல்ராஜ் கலை -3A
எஸ்.கௌதமி கலை -2A,B



ஆர்.சுவரேகா கலை -2A,B
எஸ்.விஜிதா கலை -2A,B

## கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி



அ.ஆன்யூலியற் கலை -3A
இ.பிறேமிளா கலை -3A
க.தனேஸ்வரன் கலை -3A



பா.நிரோஜன் கலை -2A, B
பா.யூடிற்பாமினி கலை -2A, B
இ.விஜயதர்சினி கலை -2A, B



ச.ஜீவிதா கலை -2A, B
சி.மயூரன் கலை -2A, B
தி.எழிலரசி கலை -2A, B




யே.றதீசியா கலை -2A, B
அ.மேரிவினித்தா கலை -2A, B

## அம்பன் அ.மி.த.க. பாடசாலை



லோ.சுலோசன கலை -3A
சி.குபிதா கலை -3A




த.இராசகுமாரி கலை -2A, B
ச.கபில்ராம் கலை -2A, B

## உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை



எஸ். சுபோதினி கலை -3A
ம.துவாரகா கலை -3A
ஆர்.யாழினி கலை -2A, B



ரி.ஜீவிதா கலை -2A, B
கே.நிருபா கலை -2A, B
எஸ்.திவ்வியவாணதி கலை -2A, B

## வேலாயுதம் மகாவித்தியாலயம்



ஜே.பிரபாகரன் கலை -3A
து.திருமகன் வர்த்தகம் -3A
இ.பிரதீபன் கலை -2A,B



வெ.குணசீலன் கலை -2A,B
த.பிரகலாதன் கலை -2A,B

## யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி



சி. சேயந்தன் கணிதம் -3A
கு.மனோரூபினி கலை -3A
யோ.நிரோஜனா கலை -3A




பே.கிரிசாந் கணிதம் -3A
மோ.கஜன் கணிதம் -3A
வ.ரதீனா கணிதம் -3A




பா.கிருஷ்ணா கலை -3A
செ.ஸ்ரீநிஷாந் கலை -3A
து.தயாதர்ஷன் கலை -3A



த.தரணி கலை -3A
இ.மாகரன் கலை -2A,B
இ.கோபிராகவன் கலை -2A,B



சி.அன்பரசி கலை 2A, B
பா.பிரகலாதன் கலை -A,2B
து.ஜனரஞ்சினி கலை -2A, B



சி.கமலதர்சன் கலை–2A,B
து.வினோத் கலை–2A,B

## கரவெட்டி ஞானசாரியார் பாடசாலை



சி.நவேதா கலை-3A
ஏ.சுதர்சினி கலை-2A,B
எஸ்.உஷா வர்த்தகம்-2 A,B

# ...புரியும் இணைந்து நடத்தும்

# ...விழா -01.05.2009

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

அ.திவ்யா கலை -3A

ஸ்ரீ.ஜனனி கலை -3A

அ.விஷ்ணுவர்த்தனி கலை -3A

வி.வானதி கலை -3A

அ.மயூரின்சயினா கலை -3A

பா.காயத்திரி கலை -3A

செ.அனுசா கலை -3A

யோ.யோகாநந்தி கலை -3A

அ.மேரிதர்சிகா கலை -3A

இ.நர்மதா கலை -3A

தி.கம்சா வர்த்தகம் -3A

ப. மதுரா கலை–2A, B

ஞா.வாகினி கலை–2A, B

ச.யாழினி கலை–2A, B

சி.சுமதி கலை–2A, B

பா.ஜனார்த்தனி கலை–2A, B

சி.சங்கீதா கலை–2A, B

ச.நிலாயினி கலை–2A, B

த.லவண்யா கலை–2A, B

மேரி நிஷாந்தினி கலை -2A, B

த.ஷசிக்கா கலை–2A, B

ம.மேரிசுகந்தினி கலை–2A, B

இ.கலையரசி வர்த்தகம்–2A, B

சி.பாகினி உயிரியல்–2A, B

எஸ்.ஆர்த்தி கலை–2A, B

## வட இந்து மகளிர் கல்லூரி

கு.நிருஜா கலை–3A

ப.தர்சிகா கலை–3A

கு.நிருபா கலை–3A

கௌ.காயத்திரி கலை–3A

ம.கிசோதனா கலை–3A

ம.துவாரகை கலை–2A, B

இ.கலைவாணி கலை–2A, B

பா.ஜனனி கலை–2A, B

உ.உமா கலை–2A, B

மா.கார்த்திகா கலை–2A, B

யோ.ஞானகலை கலை–2A, B

சி.கலையரசி கலை–2A, B

கி.உதயராணி கலை–2A, B

க.சுசிதா கலை–2A, B

கு.ராதிகா கலை–2A, B

சி.பிருந்தா கலை–2A, B

சி.வைஷ்ணவி வர்த்தகம்–2A, B

செ.பிரதீபா வர்த்தகம்–2A, B

எஸ். ஆரணி கலை–3A

கே.எஸ்.கீதாஞ்ஜலி கலை–3A

எஸ். கார்த்திகா கலை–3A

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

த.முகுந்தன் கணிதம்–3A

இ.ஹரீசன் கணிதம்–3A

சி.சத்தியவரதன் கணிதம்–3A

ம.செந்தூரன் கணிதம்–3A

க.சுதர்சன் கலை–3A

ஸ்ரீ.ஜெயந்திகுமார் கலை–2A, B

சி.அம்புஜன் கலை–2A, B

ஜெ.துஷாந்தன் கலை–2A, B

க.வாகீசன் கணிதம்–2A, B

இ.ரஜீவன் கணிதம்–2A, B

ச.ஹரிதரன் கணிதம்–2A, B

பு.விஜிதரன் கணிதம்–2A, B

ஜெ.பூங்குன்றன் உயிரியல்–2A, B

லோ.நாகராஜன் வர்த்தகம்–2A, B

எஸ். நிரோசன் கலை–2A, B

எஸ். பிரசாந்தன் கலை -2A, B

## வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

எஸ். கலைச்செல்வி கலை–3A

எஸ். பிறமிளா கலை–3A

ஆர். பிரவீனா கலை–3A

ரி. ராஜநந்தினி கலை–3A

கே. வனஜா கலை–3A

ஆர். விஜிதா கலை–3A

ஏ. கார்த்திகா கலை–2AB

நா. காயத்திரி கலை–2A, B

பி. கஸ்தூரி கலை–2A, B

எஸ். ரோசினி கலை 2A, B

எஸ். மிதுலா கலை 2A, B

ரி. நிசாந்தினி கலை 2A, B

எஸ். விதுசா கலை 2A, B

எஸ். துவாரகா கலை2A, B

ஜி. கௌஷிகா வர்த்தகம் 3A

கே. வானதி கலை –2A, B

ஜெ. உமையாவாள் கலை–2A, B

## புற்றளை மகாவித்தியாலயம்

இ.கிருஸ்ணப்பிரியா கலை -3A

எம்.ஜெயகரூபன் கலை -2A, B

## வல்வை மகளிர் வித்தியாலயம்

த.ஜீவிதா கலை–2A, B

கே. கோபியா வர்த்தகம்2A, B

# இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற அதியுயர் பயிற்சிகளும் ஆயுத தளபாடங்களும் இராணுவ வெற்றிக்கு பெரிதும் உதவின

## பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவிப்பு

வட பகுதியில் இடம்பெற்றுவரும் போரில் இலங்கை இராணுவம் அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகளின் பின்னணியில் இந்தியாவே இருந்துள்ள தென தெரிவித்திருக்கும் இலங்கையின் இரண்டு இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினருக்கான பயிற்சிகள், புலனாய்வுத் தகவல்கள் போன்றவற்றை இந்தியாவே வழங்கிவருகின்றதெனவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நாங்கள் தொடர்ச்சியான முன்னேற்ற வேகத்தை குறைக்கவில்லை. திட்டமிட்ட வகையில் முழுமையான நடவடிக்கைகளில் முன்னேற்றம் கண்டுவருகின்றோம். விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் புதிய புதிய உபாயங்களையும் கையாண்டு வருகின்றோம். இதுதான் எமது வெற்றிக்கான காரணம் என இலங்கை இராணுவ அதிகாரிகளை ஆதாரம் காட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

நான் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பயிற்சி பெற்றுள்ளேன். இருநாடுகளும் எமக்கு அதிகளவில் உதவுகின்றன என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கிரமமாக எமது அதிகாரிகளை பயிற்சிகளுக் காக அனுப்பி வருகின்றோம் எனக் குறிப்பிடும் அவர் தான் இந்தியாவில் நான்கு பயிற்சி நெறிகளையும் பாகிஸ்தானில் மூன்று பயிற்சி நெறிகளையும் பூர்த்தி செய்ததாக கூறியுள்ளார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் பகைமை நாடுகள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் அது தொடர்பாக நாம் எதனையும் செய்ய முடியாது. இருநாடுகளிடம் இருந்துமே இலங்கைப் படையினர் பிந்திய தொழில் நுட்பத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இருநாடுகளிடமிருந்துமே நாம் பயன்பெற்றுக்கொண்டுள்ளோம் எனவும் இந்தியன் எக்ஸ்பிரசுக்கு உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல இதுதொடர்பாக தெரிவிக்கையில், என்னைப் பொறுத்தவரையில் எனது தொடக்க கால பயிற்சியில் 80 வீதமானவை இந்தியாவிலேயே பெற்றுக் கொண்டேன். பாகிஸ்தானிலும் பயிற்சியைப் பெற்றுக்கொண்டேன். பொதுவாக நாம் தளபதிகள் மட்டத்திலான அதிகாரிகளைத் தான் பயிற்சிக்கு அனுப்புகின்றோம் என்றார்.

தனது பதவிக்காலத்தில் ஆயுதங்கள், தளபாடங்களை இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்வதில் சில பிரச்சினைகள் இருந்ததாகவும் அப்போது பாகிஸ்தான் அதற்கு உதவ முன்வந்ததாகவும் ஜெனரல் பலகல்ல தெரிவித்தார்.சீனாவிடமிருந்தும் தாம் இராணுவ உபகரணங்களை பெற்றுக் கொண்டதாக தெரிவித்தார். அமெரிக்காவும் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளித்திருப்பதாக குறிப்பிட்ட அவர் சிறிய அளவிலான உதவியை மட்டுமே அமெரிக்கா வழங்கியது எனவும் குறிப்பிட்டார்.

"ஆனால் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தானில் இருந்தும் இந்தியாவில் இருந்துமே பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர். காடுகளில் போர்புரிவதற்கான சிறப்புப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கும், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் எமது படையினரை நாம் இந்தியாவுக்கே அனுப்பினோம் எனவும் குறிப்பிட்டுள்ளார் தளபதி பலகல்ல.

இதேவேளை தற்போதைய இர்ராணுவ நடவடிக்கைகளின் போது இந்தியா புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டு உதவி அளித்து வருவதாகத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார, அத்துடன் பிர தேசங்களில் கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண் டதன் மூலமாக இந்தியா தமக்கு பெருமளவுக்கு உதவியது எனவும் சுட்டிக் காட்டினார்.

"அதி உயர்ந்தபட்ச பயிற்சிகளும், ஆயுத, தளபாடங்கள் கிடைத்தமையுமே விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிகளுக்குப் பெருமளவுக்கு உதவியுள்ளன. எனவும் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார். (ஓ-6)

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை 100 ரூபாவிலிருந்து 200 ரூபா வரையில் அதிகரிக்கப்படு வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

விலையை அதிகரிப்பது தொடர்பில் சமையல் எரிவாயு நிறுவனம் கவனம் செலுத்தியுள்ள அதேவேளை, இது குறித்து தீர்மானிப்பதற்கென நுகர்வோர் விவகார அதிகார சபை கூடி ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதே தற்போதைய தேவையாக உள்ளது

## ஹரித்தாஸ் - அவுஸ்திரேலிய நிறுவனப் பணிப்பாளர் குருட்

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியிலிருந்து இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு ஒருநாள் உணவு வழங்குவதற்கு இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவைப்படுவதாக கரித்தாஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களை உயிருடன் வாழ வைப்பதற்கு ஒரு நாளைக்கு 1.30 அமெரிக்க டொலர் தேவையென கரித்தாஸ் கணக்கிட்டுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் முகாம்களில் 32 ஆயிரம் ஆகவிருந்த இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை தற்பொழுது 1 இலட்சத்து 90 ஆயிரமாக அதிகரித்திருப்பதால் முகாம்களில் கடுமையான இடப் பற்றாக்குறை காணப்படுகிறது என கரித்தாஸ்–அவுஸ்திரேலிய நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜக் டீ குருட் கூறியுள்ளார்.

மார்ச் மாதத்தில் முகாம்களில் 32 ஆயிரம் பேரே இருந்தனர். ஆனால் தற்பொழுது ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேர் உள்ளனர். மக்கள் மிகவும் பலவீனமடைந்த நிலையிலேயே முகாம்களுக்கு வருகின்றனர். அவர்களில் பலர் காயமடைந்திருப்பதுடன், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர்.

இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கான குடிநீர், தற்காலிக கூடாரங்கள், மருந்துப் பொருட்களை வழங்குவதற்கும் நிதியுதவி தேவையெனக் குறிப்பிட்டிருக்கும் ஹரித்தாஸ் நிறுவனம், இதற்கு சர்வதேச நாடுகள் உதவி வழங்க வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

இதனைவிட மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகளில் இருப்பதால் அவர்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்த நிறுத்தம் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதே தற்போதைய தேவையாகவுள்ளது என குருட் தெரிவித்துள்ளார். (ஓ)


நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

தேவகி துரைராஜா

(ஓய்வுபெற்ற தொலைக்கல்வி போதனாசிரியையும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பிரதிஅதிபரும்)

தோற்றம் 27.04.1942

மறைவு 30.04.2008

காலத்தால் மறக்கமுடியாத தாயே
பாசத்தால் எம்மை கட்டுண்டறுத்த தாயே
வந்தாரை வாழ்விக்கும் பெரு மனம் படைத்த தாயே
பிள்ளைகளையெல்லாம் உன் பிள்ளை போல் காத்த தாயே
காலமெல்லாம் கல்விக்கே சேவை செய்த தாயே
நாம் இனி உம் திருமுகத்தை எப்போ காண்போம் தாயே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்

அன்னாரின் நினைவையொட்டி இன்று வெள்ளிக்கிழமை (01.05.2009) காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

புறாடிலேன் (முன் ஒழுங்கை )
அரியாலை, யாழ்ப்பாணம்

கணவர்
உற்றார் உறவினர்.

(2521)




சுவட்டத்தில் சுவடி நின்று சுவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி –கிளியே
நாளில் மறப்பாரடி:

– பாரதி

வலம்புரி

## நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்

வன்னி யுத்த களத்திலிருந்து வந்துள்ள மக்களின் இருப்புநிலை குறித்து வருந்தாமல் –கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

வளங்களோடு வசதிகளோடு வாழ்ந்த மக்கள் எல்லா நலன்களையும் இழந்து உறவுகளைப் பலி கொடுத்துவிட்டு வாழ்க்கை வெறுத்த நிலையில் முகாம்களில் அடைபட்டுள்ளனர்.

தங்கள் உறவுகளைச் சந்திக்க முடியாத பரிதாபம். வேதனைகளை, இழப்புகளை பகிர்ந்து கொள்ள முடியாத சோகம்.

இதற்கு மேலாக பறிகொடுத்த தங்கள் உறவுகள் குறித்து ஆற்ற வேண்டிய ஆத்ம ஈடேற்ற சடங்குகளைச் செய்ய முடியாத பரிதாபம்.

இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அந்த மக்களை வாட்டுகிறது;வதைக்கிறது.

விருப்பு வெறுப்புகளைத் தொலைத்துவிட்டு மரத்துப் போன மனநிலையில் அந்த மக்கள் வாழ்வதற்கான காரணம்தான் என்ன?

நாட்டில் ஒற்றுமையில்லை. உரிமையில்லை. பெரும்பான்மை சிறுபான்மை என்ற வர்க்க பேதம். அதனால் மனிதப் படுகொலைகள். எங்கும் அவலக் குரல். துன்பச் சுமை.

ஒருவரை ஒருவர் நேசிக்கத் தெரியாத கலாசாரம், இந்தக் கோரப் பிடிக்குள் அகப்பட்ட மக்கள் மீள முடியாமல் தவிக்கின்றனர்.

இடையிடையே கவலை தெரிவிக்கும் உலக நாடுகள் ஆயுதங்களையும் வழங்குகின்றன. ஆஹா, ஊஹா! என்றும் கத்துகின்றன. எதிலுமே தெளிவில்லை.

இந்தத் தெளிவில்லாத மாந்தர் கூட்டத்தில் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தன் அறியாமையை அதிகமாக அலட்டிக் கொள்கிறார்.

முன்னதாக ஒருவர் உண்ணாவிரதமிருந்து ஒட்டுமொத்தமாகத் தன்னைப் பிசக்கிக் கொண்டார். இறுதிக் காலத்தில் இதெல்லாம் ஊழ்வினைப் பயனென்றால், இப்போது அதிகம் அலட்டிக் கொள்ளும் ப.சிதம்பரத்தின் முடிவு இந்தியத் தேர்தலில் தெரியும் என்பதோடு விட்டுவிடலாம்.

ஆனால், எங்கள் உறவுகள் முகாம்களில் அடைபட்டு வசதிகளற்றவர்களாக வாழ்கின்ற நிலையில் அவர்களுக்கு உதவுவது எங்கள் அனைவரதும் தலையாய கடமை.

அன்பு உள்ளங்களே! பாரதி கூறியது போல் நிதி மிகுந்தவர் பொற்குவை கொடுங்கள். நிதி குறைந்தவர் காசுகள் கொடுங்கள். எங்கள் துன்பத்தை – எங்கள் அவலத்தை நாங்களே துடைப்போம் வாருங்கள்.

# நலன்புரி நிலையங்களின் நிலைமை தொடர்பில் எம்மால் எதனையும் அறியமுடியாதுள்ளது

## பிரிட்டன், பிரான்ஸ் அமைச்சர்களிடம் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வன்னிப் பகுதி மற்றும் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் நிலைமை தொடர்பில் எம்மால் எதனையும் அறிய முடியாமல் உள்ளது. இது தொடர்பான தகவல்களை முதல் தடவையாக வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் பெறநேர்ந்துள்ளது. அது குறித்து நான் வெட்கமடைகின்றேன் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளாவது தனக்கு வவுனியா நலன்புரி முகாம்களின் நிலைமை தொடர்பில் தகவல்களை வழங்கியமைக்காக நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தினர்.

கொழும்பில் அமைந்துள்ள சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன் போது வடக்கில் இடம்பெயர்ந்துள்ள பொது மக்களின் நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தகவல் வெளியிடுகையில்,

இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கான வசதிகள் மற்றும் அவர்களின் தேவைகளை நிறைவு செய்வது தொடர்பில் இரண்டு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். வெளிநாட்டு இராஜதந்திரிகள் இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்து விட்டு செல்வது முக்கியமான விடயம் என்று இதன்போது ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை அரசியல் தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு என்ன? என்று பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் வினவினர். அதற்கு பதிலளித்த போது அரசியல் தீர்வு தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் முன்வைத்ததும் ஐக்கிய தேசிய கட்சி தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று எமது நிலைப்பாட்டை அறிவித்தோம்.

அத்துடன் இடம் பெயர்ந்துள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம் என்றார். (ஓ-6)

## இறக்குவானை அம்மன் ஆலய திருவிழா மிரட்டலால் நிறுத்தம்

(கொழும்பு)

சுமார் 200 வருட வரலாற்றைக் கொண்ட இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருவிழா இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பரிபாலன சபையினர் ஆலய வருடாந்த திருவிழாவை ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி தொடங்கி மே மாதம் 10 ஆம் திகதி வரை கொண்டாட தீர்மானித்து அதற்கான முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில் திருவிழா இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய திருவிழா ஏப்ரல் மாதம்28 ஆம் திகதி தொடங்கி மே மாதம் 10 ஆம் திகதி வரை நடத்த பரிபாலன சபையினர் திட்டமிட்டிருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சிங்கள இளைஞர்கள் இது சிங்கள நாடு. நாம் சொல்வதையே தமிழர்கள் கேட்க வேண்டும் எனக் கூறி அச்சுறுத்தினர். சிங்கள பௌத்தர்களின் வெசாக் கொண்டாட்டம் மே மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.


வெசாக் வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளதால் இக்காலப் பகுதியில் எந்தவொரு கோவில் விழாக்களும் நடத்த முடியாது என கட்டளையிட்டனர். அவ்வாறு அத்து மீறி நடத்தினால் எதிர்விளைவுகள் ஏற்படும் என்று சிங்கள இளைஞர்கள் ஆலய பரிபாலன சபையினருக்கு எச்சரிக்கை செய்தனர்.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் இறக்குவானை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-1)

## இலங்கை தமிழர்களுக்கு சுய நிர்ணய அதிகாரம்

### பிரகாஷ் கரத் வலியுறுத்தல்

(புதுடில்லி)



இலங்கையில் தனி ஈழம் அமைவதே தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வாக இருக்கும் என்று அ.தி.மு.க பொது செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார். இந்த நிலையில் அ.தி.மு.க கூட்டணி கட்சியான மாக்சிஸ்ட் கம்யூனிஸ்டின் பொது செயலாளர் பிரகாஷ் கரத் நேற்று முன்தினம் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், " இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு முழு சுய நிர்ணய அதிகாரம் மற்றும் உரிமைகளுடன் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு க்ர்ண்பதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

தேர்தல் கூட்டணி என்பது, ஒவ்வொரு பிரச்சினையிலும் ஒரே கருத்தை கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தம் கிடையாது. இலங்கை பிரச்சினையில் நாங்கள் வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளோம்" என்றார். (ஓ-6)

## வெள்ளி நற்சிந்தனை 69

# பக்தியின் மொழி தமிழ்

இறைவன் பற்றிய நம்பிக்கை மனிதவாழ்வியலின் அடிப்படை என்பது நமது முன்னோர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையால் இறைவனை எமக்கு மிக நெருக்கமான உறவாக் எண்ணி வாழும் முறைமை ஒன்று இருந்துள்ளது. வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பத்தையும் இன்பத்தையும் பகிர்ந்து கொள்ள ஒரு உறவு தேவை. அந்த உறவு எமக்கு அருகில் இருக்க வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகிறோம்.

அருகில் இல்லாதபோது தொடர்பு கொண்டு பேச வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆனால் உலகியல் நிலையில் எல்லோருக்கும் இத்தகைய உறவு கிடைப்பதில்லை. கிடைத்திருந்தாலும் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படுவதுண்டு.

இந்த நிலையில் மனித மனம் துவண்டுவிடும். வாழ்வை வெறுத்துச் சாவைத் தழுவத் தயாராகும். தனது மன அழுத்தத்தைப் புரிந்து கொண்டு ஆறுதல் தந்து அன்புடன் அரவணைக்க ஒரு நட்பு இல்லையே என ஏங்கிநிற்கும். கடந்து போன வாழ்வையும் இருந்த இருப்பையும் எண்ணிச் சோர்ந்துவிடும். அதுவே ஒரு நோயாகி மனித உடலையும் உள்ளத்தையும் வருத்தும். இத்தகைய நோயை மாற்றி மனிதனை மீண்டும் வாழ வைக்க ஒரு மருந்து தேவை. அதனை எமது நாயன்மார்களில் வயதில் மூத்தவரான நாவுக்கரசர் தனது பாடல்களிலே விளக்கிக் கூறுகின்றார்.

வாழ்க்கையில் ஒரு பற்று ஏற்படுவதற்கு சிறந்தவொரு உறவு நிலையை அறிமுகம் செய்துள்ளார். இறைவனையே எமக்கு மிக நெருக்கமான உறவாகக் கொண்டு வாழும் போது மனித மனமும் உடலும் நலம் பெற்றுப் பொலிவு பெறும் என்ற உண்மையைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். நெருக்கமான பற்றுக் கொண்ட உறவாக இறைவனையே மனத்தில் வரித்துக் கொண்டால் வாழ்க்கை அமைதி பெறும் என்பதே அவருடைய வாழ்வியல் அநுபவம்.

இறைவனோடு இயற்கை நிலையில் தொடர்பு கொள்ள வழியையும் காட்டியுள்ளார். இயற்கையாக எம்மோடு சூழ இருக்கும் உயிரினங்களைத் தோழமையாகக் கொண்டு வாழும்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வாழ்க்கையை அறிமுகம் செய்கிறார். இறைவன் இருக்குமிடத்தை உணர்ந்த குயிலினங்களைத் தோழமையாக்கித் தொடர்பாடல் செய்ய முடியும் எனக் காட்டுகிறார். எம்முடைய நிலையை இனிமையான குரலில் எடுத்துக் கூறக் கூடிய ஒரு நல்ல தூதாகக் குயிலினத்தைக் குறிப்பிடுகிறார்.

"யாரொடு நோவேன்! யார்க்கெடுத்துரைப்பேன்!' என்று வருந்தாமல் எமது நிலையைச் சோலைக் குயிலினங்களிடம் சொல்லிவிட்டால் போதும். அவை இறைவனுக்கு அதை ஏற்றபடி எடுத்துரைத்து எம்மையும் இறைவனையும் தொடர்புபடுத்தி விடும் எனப் புதியதொரு நம்பிக்கையைத் தன் வாழ்வியல் அனுபவத்தை எமக்கும் வழியாக்கியுள்ளார்.


*" சொன்மாலை பயில்கின்ற குயிலினங்கள் சொல்லீரே*
*பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்*
*முன்மாலை நகு திங்கண் முகிழ் விளங்கி முடிச் சென்னிப்*
*பொன்மாலை மார்பெனன் புதுநல முண்டிகழ்வானோ"*

# பன்றிக் காய்ச்சல் நோய் ஆசியாவிலும் பரவியது

# தென்கொரியாவில் 7 பேருக்கு அறிகுறி

(சியோல்)

அமெரிக்கா கண்டத்தில் உள்ள மெக்சிக்கோ, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் உயிர் கொல்லி நோயான பன்றிக் காய்ச்சல் பரவி வருகிறது. இதில் மெக்சிக்கோ நாடு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு இது வரை 160 பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலருடைய நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.



அமெரிக்கா கண்டத்தில் இருந்து இந்த நோய் ஐரோப்பாவுக்கும் பரவியது. நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் பலரை நோய் தாக்கியுள்ளது.

இப்போது ஆசியாவுக்கு நோய் பரவி உள்ளது. இஸ்ரேலில் 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நியூசிலாந்திலும் 3 பேருக்கு இந்நோய் தொற்றியுள்ளது. தென்கொரியா, பெரு, பிரேசில், ஆஸ்திரேலியா, கவுடிமாலா ஆகிய நாடுகளில் நோய் அறிகுறி தெரிகிறது.

தென் கொரியா நாட்டில் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களை சோதனை செய்து பார்த்த போது 7 பேருக்கு பன்றி காய்ச்சல் அறிகுறிகள் இருந்தன. அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகின்றனர்.

ஆசியாவுக்கும் நோய் புகுந்து விட்டதால் இந்தியா உள்ளிட்ட மேலும் பல ஆசிய நாடுகளுக்கும் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே அனைத்து நாடுகளும் உஷார் அடைந்துள்ளன.

மெக்சிகோவில் இதுவரை 2 ஆயிரத்து 500 பேரை நோய் தாக்கியுள்ளது. அதில் ஆயிரத்து 300 பேர் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறனர். அமெரிக்காவில் 64 பேரை தாக்கியுள்ளது. மெக்சிக்கோவில் நோய் வேகமாக பரவி வருவதால் நாடு முழுவதும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் அனைவரும் முகமூடி அணிந்தே வெளியே செல்கின்றனர். தெருவில் மக்கள் நடமாட்டம் குறைந்து விட்டது. வர்த்தக நிறுவனங்களில் வியாபாரம் கடுமையாக பாதித்துள்ளது.

தங்கள் நாட்டுக்குள் நோய் பரவிவிடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு நாடுமே தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. (ஓ-6)

## சோமாலிய கடற்கொள்ளையர்கள் 29 பேரை ரஷ்யா சிறைப்பிடிப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய கடற்படை சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களின் படகு ஒன்றை கைப்பற்றியது. அதில் இருந்த 29 கொள்ளையர்கள் பிடிபட்டனர். சோமாலிய கடலோர பகுதியில் இந்த படகு பிடிபட்டது.

படகை கடற்படை வீரர்கள் சோதனையிட்ட போது, அதில் 7 ஏ.கே. 47 துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் ஆகியவை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை கடற்படையினர் கைப்பற்றினார்கள்.

அத்துடன் கடற் பயணத்துக்குரிய செயற்கைக்கோள் சாதனமும் அதிக அளவிலான வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. (ஓ-6)

# இலங்கை தமிழர்கள் தொடர்பில் பிரித்தானியா என்ன செய்திருக்கிறது?

## த கார்டியன் கேள்வி

பிரித்தானிய அரசாங்கம் இலங்கை தமிழர்கள் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என பிரித்தானியாவின் த கார்டியன் இணையத்தளம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாடுகளின் அவதானிப்பு தடையின் காரணமாகவே அரசாங்கத்தினால் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த நிலையினை பிரித்தானிய அரசாங்கம் மாற்ற வேண்டும் என த கார்டியன் கோரியுள்ளது.

சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்த போதும், இலங்கை அரசாங்கம் தொடர்ந்து தமிழர்களை கொன்று குவிக்கிறது.

மூன்றாயிரத்துக்கும் அதிகமான எறிகணைகளை கடந்த செவ்வாய்க்கிழமையன்று மாத்திரம் சிறிய பரப்பினை கொண்ட பாதுகாப்பு வலயத்தினுள் அதனை சுற்றி வளைத்துள்ள இராணுவம் வீசியுள்ளது.

இதனால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அரசாங்கம் உலகத்திற்கு மறைத்து வருகிறது என த கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

கனரக ஆயுதப் பாவனையை இடைநிறுத்தி விட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் அதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கம் மேற்கொண்ட எறிகணை வீச்சுக்களில், சிறுவர்கள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர்.

இதன் பொருட்டு வெள்ளை மாளிகை எவ்விதமான அறிக்கையினையும் வெளியிடவில்லை. இலங்கையின் தமிழினப் படுகொலை தொடர்பில் சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் மௌனமாகவே செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலை இலங்கை நிலவரம் குறித்து சர்வதேச நாடுகளிடையே ஒன்றித்த கவனமோ, சீரான தொடர்போ இல்லை என்பதை எடுத்து காட்டுகிறது. இந்த நிலையினை மாற்ற பிரித்தானியா முன்வர வேண்டும்.

இலங்கையின் தமிழின அழிப்புக்கு எதிராக பல்வேறு நாடுகளிலும் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பிரித்தானிய அரசாங்கம் தலைமை தாங்கி தொடரும் இனவழிப்புகளை இல்லாது செய்ய முன்வர வேண்டும் என அனைத்துலக நாடுகள் விரும்புகின்றன.

இதன் பொருட்டு பிரித்தானிய அரசாங்கம் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என அந்த செய்தியில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# பதவியேற்று நூறு நாட்களில் ஒபாமா சாதித்தவை என்ன?



(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பதவியேற்று 100 நாட்கள் ஆகிவிட்டன. கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்த இந்த 100 நாட்களில் மக்கள் எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற அவர் எடுத்த நடவடிக்கைகள் தான் என்ன? பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வழிவகைகளை கையாண்டாரா என்பன போன்ற கேள்விகள் மக்களிடையே எழுந்துள்ளன காரணம் அதிபராக இருந்து புஷ்ஷின் நிர்வாகத்தில் அதிருப்தியடைந்த அமெரிக்கர்கள் இளையவரான பராக் ஒபாமாவிடம் நிறையவே எதிர்பார்க்கின்றனர்.

இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற ஒபாமா என்ன செய்துள்ளார் என்பது பற்றிய கேள்விக்குப் பதிலளித்துள்ள வெள்ளை மாளிகை இந்த 100 நாள் அளவீடுகள் எல்லாம் செயற்கையானவை. இருப்பினும் இந்த 100 நாளில் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தது.

பொது சுகாதாரம், சரிவை நோக்கி செல்லும் வங்கிகளின் மறு சீரமைப்பு, மிகப் பெரிய சரிவைத் சந்தித்த மோட்டார்கார் துறையின் முன்னேற்றம், புவி வெப்பமயமாவதைத் தடுக்கும் நடவடிக்கைகள், பல நாட்டுத் தலைவர்களுடன் சந்திப்பு, முக்கிய முடிபுகள் எடுப்பவராக அவர் செயல்பட்டிருக்கிறார்.

சமீபத்தில் புதிதாக உருவாகியுள்ள பன்றிக் காய்ச்சல் நோய் தான் ஒபாமா பதவியேற்ற பின் ஏற்பட்டுள்ள முதல் சவால் இதை அவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது போகப் போகத் தான் தெரியும். அமெரிக்க அதிபர்களாகப் பொறுப்பேற்றவர்களுக்கு முதல் 100 நாள் என்பது அவர்களது திறமைகளுக்கு ஒரு சவாலாகவே இது வரையிலும் இருந்து வந்துள்ளது.

அது போலவே அதிபராக இருந்த புஷ்ஷும் முதல் 100 நாளில் எந்த விதமான சாதனைகளையும் செய்து விடவில்லை. இரண்டு முறை அமெரிக்க அதிபராகப் பதவி வகித்த புஷ் உலக வர்த்தக மையத்தின் மீது 2001 ம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதியன்று பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய பின்னரே ஈராக்கின் மீது போர் தொடுத்தார்.

அதாவது அதிபராகப் பொறுப்பேற்ற பின் ஒன்பது மாதங்கள் கழித்தே இந்த நடவடிக்கைகளை புஷ் எடுத்தார் என்று தெரிவித்தனர்.

எனவே 100 நாள் என்பது வெறும் கற்பனை. குறுகிய காலத்தில் எதையும் செய்து விட முடியாது என்பது அவர்களது கருத்து ஆனா லும் ஒரு மனிதாபிமானம் மிக்கவர் வெள்ளை மாளிகையில் வந்து செயல்படுகிறார் என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது. (ஓ-6)

# பாகிஸ்தானில் தலிபான்கள் வசமிருந்த நகரத்தை இராணுவம் கைப்பற்றியது



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்த டக்கார் என்ற நகரத்தை பாகிஸ்தான் இராணுவம் கைப் பற்றியுள்ளது. இங்கு நடந்த சண்டையில் 50 பயங்கர வாதிகள் கொல்லப் பட்டனர். அமெரிக்கா எச்சரித் ததை அடுத்து தலிபான் பயங்கரவாதிகள் மீதான தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

வடமேற்கு மாகாணத்தில் தலிபான்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக கடந்த சில நாட்களாக இராணுவம் கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்த டக்கார் என்ற நகரத்தை மீட்கும் நோக்கத்தோடு ஹெலிகொப்டர்கள் மூலமாக இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்த சண்டையில் 50 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து இந்த நகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. தலிபான்கள் பிடித்து வைத்திருந்த 18 பொலிஸாரும் மீட்கப்பட்டனர். இராணுவத் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதை அடுத்து தலிபான்கள் பின் வாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

## ஸ்ரீ அம்மா பகவான் அற்புதமாக அருளிய பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கல்



ஸ்ரீ அம்மா பகவான் அற்புதமாக அருளிய விபூதி, சந்தனம், குங்குமம் ஆகிய பிரசாதங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி முதல் அடியார்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டு தினமாகிய ஏப்ரல் 14 ஆம் திகதி முதல் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக மையத்தில் அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து இன்றுவரை அருளப்பட்டு வரும் விபூதி, சந்தனம், குங்குமப் பிரசாதங்களே அதனைப் பார்வையிட்ட பக்தர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்ள வரும் பக்தர்கள் ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியுடன் பங்கு கொள்ளுங்கள்.

நன்றி

தொடர்புக்கு
பொறுப்பாளர்,
சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம்,
சுழிபுரம் சந்தி அருகாமை.

(2575)

T.P.NO:060 221 7352.


# இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணங்களுக்கு 100 மில். வெளிநாட்டு உதவிகள் தேவை

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

மோதல் காரணமாக இடம் பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 100 மில்லியன் டொலர் நிதி அவசரமாகத் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ள அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அத்தொகையை வெளிநாடுகளிடமிருந்து உதவியாக அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச ஊடகமொன்றிற்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு சுமார் 2 இலட்சம் பொதுமக்கள் வருகை தந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு 100 மில்லியன் டொலர் நிதி தேவைப்படும்.

நாம் இத் தொகையை முழுமையாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமென்று நம்புகிறோம்.

ஆயினும், இது தொடர்பான சில விடயங்களுக்காக தற்போது அவசரமாகப் பணம் செலுத்த வேண்டியுள்ளது.

அதே நேரம், இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடொன்று எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் சர்வதேச உதவிகள் தொடர்பிலான தமது எதிர்பார்ப்புக்கள், தேவைகளை முன்வைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றார். (ஓ-6)

# டெக்கான் அணியின் தொடர் வெற்றிக்கு தடை போட்டது டில்லி டேர் டேவில்ஸ்



(சென்சூரியன்)

டில்சான்-டினேஷ் கார்த்திக்கின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தொடர் வெற்றிக்கு தடை போட்டது.

இந்தியன்பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் 2ஆவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடை பெற்று வருகின்றது.

இதில் நேற்று சென்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 21ஆவது போட்டியில் கில்கிறிட்ஸ் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர் டேவில்ஸ் அணித் தலைவர் சேவாக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில்துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

ஆரம்ப ஜோடிகளான அணித் தலைவர் கில்கிறிட்ஸ் 8 ஓட்டங்களுடனும் கிப்ஸ் பூச்சியத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 2.3 ஓவர்களில் 19 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் தொடர்ந்து களம் இறங்கிய வீரர்கள் பிரகாசிக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பரன் சிமித் 28 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 48 ஓட்டங்களையும் ரி.எஸ். சுமன் 14 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் பிலாக்கியா 22, றோகித் சர்மா 17, வேணுகோபால்ராவ் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நான்ஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நெகரா 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சங்கவான், மிஸ்ரா மற்றும் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 149 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத் தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு ஆரம்பத்தில் காம்பீர்-சேவாக் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் சேவாக் 11 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 20 ஓட்டங்களுடனும் காம்பீர் 15 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 17 ஓட்டங்களுடனும் டி வில்லியர்ஸ் 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 6.5 ஓவர்களில் 49 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான்-டினேஷ் கார்த்திக் ஜோடி பொறுப்பான இணைப்பை வழங்கி அணியை தூக்கி நிறுத்தினர்.

இந்த ஜோடி 10.2 ஓவர்களில் 79 ஓட்டங்களை அதிரடியாக எடுத்த நிலையில் டினேஷ் கார்த்திக் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



எனினும் மறுமுனையில் அரைச்சதம் விளாசி டில்சான் அசத்த டில்லி டேர் டேவில்ஸ் அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் திலகரட்ண டில்சான் 46 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் மான்ஹஸ் 3 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் சோயப் 2 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.சிங், ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் ஆட்டநாயகனாக டில்லி டேர் டேவில்ஸ் அணியின் நான்ஸ் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் பெற்ற 4ஆவது வெற்றி இதுவாகும் என்பதுடன் 8 புள்ளிகளுடன் அரையிறுதிக்கு முன்னேறுவதை பிரகாசப்படுத்தியது.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆவது போட்டியில் சந்தித்த முதலாவது தோல்வி இது என்பது குறிப்பிடத்தக்கது.

# றெய்னா கலக்கல்; சென்னை அசத்தல்

றெய்னாவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று சென்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 22ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணித் தலைவர் வோர்ன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ஹைடன் ஒரு ஓட்டத்துடனும் பார்திப் பட்டேல் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 3.3 ஓவர்களில் 17 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது. எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த றெய்னா-பத்ரிநாத் ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீண்டெடுத்தனர்.

இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 7.4 ஓவர்களில் 67ஓட்டங்களை எடுத்த நிலையில் பத்ரிநாத் 27 பந்துகளில் (4பவுண்டரிகள் அடங்கலாக) 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஜேக்கப் ஓரம் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 12.5 ஓவர்களில் 88 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து அணித்தலைவர் தோனி களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய றெய்னா 26 பந்துகளில் அரைச் சதத்தை பூர்த்தி செய்ய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 14.4 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது. இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18.5 ஓவர்களில் 150 ஓட்டங்களை பூர்த்தி செய்தது.

இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சுரேஷ் றெய்னா 55 பந்துகளில் (10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்அடங்கலாக) 98 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார். இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 164 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணித் தலைவர் தோனி 19 பந்துகளில் (ஒருசிக்ஸர் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 4 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் யூசுப் பதான், முனாப் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஷேன்வோர்ன் ஒரு விக்கெட்டை யும் வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 165 ஓட்டங்களைஎடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ்அணியின் முன்னணித்துடுப் பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 19.3 ஓவர்களில் 126 ஓட்டங்களை மாத்திர மெடுத்து சகல விக்கெட்டுக் களையுமிழந்து 38 ஓட் டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஜடேஜா 37 ஓட்டங்களையும் கியூனி 28, யூசுப்பதான் 20, கஸ்னோகர் 10 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் பாலாஜி 4 விக்கெட்டுக் களையும் அல்பி மோர்கல், ஜேக்கப் ஓரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும் சுரேஸ் றெய்னா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தனர். இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு 98 ஓட்டங்களையும் ஒரு விக் கெட்டையும் களத்தடுப்பில் 2பிடிகளையும் எடுத்து சகல துறைகளிலும் கலக்கிய றெய்னா ஆட்ட நாயகனாக தெரிவானார். இவ்வெற்றி யின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் பெற்ற 2 ஆவது வெற்றி இதுவாகும்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 73





1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி கொழும்பு சிங்கள விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தொடரின் 5ஆவது போட்டியில் இலங்கை-சிம்பாவே அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி அழைத்ததற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 227 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன்10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 36 ஓட்டங்களைக் கொடுத்து அணித்தலைவர் காம்பிளை (54) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 228 ஓட்டங்களை எடுத்து 6விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.


1996ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 7ஆம் திகதி கொழும்பு ஆர் .பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை-அவுஸ்ரேலிய அணிகள் மோதின.

**பாலா**

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இப்போட்டி மழை காரணமாக தாமதமாக ஆரம்பமான தால் ஆட்டம் இரு அணிகளுக்கும் தலா 35 ஓவர்கள் கொண்டதாகக் குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 35 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 33 ஓவர்களில் 184 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதன் மூலம் 1996ஆம் ஆண்டு சிங்கர் உலக தொடரில் இலங்கை அணி சம்பியனானது. இதில் முரளிதரன் 7 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து லீமனை (15) ஆட்டமிழப்புசெய்து ஒரு விக்கெட்டை சாய்த்தார். *(பயணிக்கும்)*

# எண் விளையாட்டு-70



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ சர்வதேச அமைப்புக்கள் உதவி

## அரசாங்கம் தெரிவிப்பு

ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அரசு பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றது என்றார் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான அமைச்சர் மகிந்த சமரசிங்க.

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் உள்ள மக்களின் நிலை குறித்தும் பிரான்ஸ் -பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்களின் விஜயம் குறித்தும் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹனவும் கலந்து கொண்டார். அமைச்சர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது,

அரச கட்டுப்பாட்டுப் பகுதிய்யை நோக்கி ஒரு இலட்சத்து8 ஆயிரத்து 535 பொதுமக்கள் வந்தடைந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற அரசு பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. இவர்கள் வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளுக்கென சர்வதேச அமைப்புக்களின் உதவிகள் பெறப்பட்டுள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. சபை, ஐ.நா.அகதிகளுக்கான அமைப்பு போன்றவை பல உதவிகளை எமக்கு அளித்து வருகின்றன.

அதற்கு நன்றி கூற நாம்கடமைப்பட்டிருக்கின்றோம். அரசு கோரும் உதவிகளை எமக்கு அதிகளவில் அளித்து வருகின்றவர்கள் எதிர்காலத்திலும் எம்முடன் இணைந்து செயற்படுவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார். (ச-5)

# கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு கப்பல்கள் மூலம் தருவிக்கப்பட்ட கோதுமை மா மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் போதியளவு வழங்கப்பட்டு வந்தது.

உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகத்திற்கென எம்மால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட கோதுமை மா அவர்களால் தற்போது மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கோதுமை மாவினை பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் ப.நோ.கூ. சங்கங்கள் அதற்கான வழங்கற் கட்டளையினை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று, கோதுமை மாவினை களஞ்சியத்திலிருந்து பெற்று பொதுமக்களுக்கு கட்டுப்பாடின்றி விநியோகிக்கு மாறும் எச்சந்தர்ப்பத்திலும் கோதுமை மாவிற்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை எனவும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# நிவாரணப் பொருட்களுடன் விசேட விமானங்கள்

(கொழும்பு)

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்து நலன்புரி நிலையங்களில் உள்ளோருக்கு விநியோகிப்பதற்காக, தெற்கில் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அத்தியாவசியப்பொருட்கள் வவுனியா செட்டிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு தினமும் விமானங்கள் மூலம் கொண்டு செல்லப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உலருணவு பொருட்கள், மருந்து வகைகள், குடிநீர் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பனவே இவ்வாறு விமானம் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் இதற்கென இலங்கை விமானப்படையின் சரக்கு விமானங்கள் பல சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 2009ஆம் ஆண்டிற்கான தமிழ்மொழித்தினப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற சிந்து நடைக் கூத்து போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதலிடத்தை பெற்றது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாமிடத்தையும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டதாக யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (ச-5)

## மோதலில் வெற்றி பெற்...

செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் ஆனாலும் பொதுமக்களை வெளியேற விடாது விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எது எவ்வாறு இருந்தாலும் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் என்ற முறையில் இலங்கைஅரசாங்கம் ஜனநாயக ரீதியில் செயற்பட்டு மனித நேய சட்டங்களை மதிக்க வேண்டியது கடமை என மிலிபான்ட் பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தற்போது காணப்படும் பிரச்சினையானது பிராந்திய ரீதியாகவும், அதற்கும் அப்பாலும் சென்று விடக் கூடாது என்பதற்காகவே ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இதனைக் கொண்டுவர பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முயற்சித்ததாக மிலிபான்ட் தெரிவித்துள்ளார்.

### மோதலில் வெற்றி சமாதானத்தில் தோல்வி

விடுதலைப் புலிகள் சரணடைய வேண்டுமா என பி.பி.சி கேட்ட கேள்விக்கு பதிலளித்த மிலிபான்ட்,சர்வதேச சமூகத்தின் உதவிகள் தேவைப்படும், ஜனநாயக நாடான இலங்கையில் வன்முறையானது அரசியல் தீர்வுக்கான பாதையாக அமையாது என்பதால் வன்முறைகளைக் கைவிடுமாறு நாம் அவர்களை வலியுறுத்துகிறோம்.

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளும், தேவைகளும் அங்கீகரிக்கப்படும் சூழ்நிலையைக் காண்பதற்கே சர்வதேச சமூகம் விரும்புகிறது என்றார். (ச-5)

## பரமேஸ்...

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியா அரசு தனக்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் தற்காலிகமாக உண்ணாநிலைப் போராட்டத்தை நிறுத்தியுள்ளதாகவும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் தன்னுடைய போராட்டம் தொடரும் எனவும் பரமேஸ்வரன் தெரிவித்தார். (எ-5)

## மோதல் தவிர்ப்பு...

துப்பாக்கிப் பிரயோகங்களினால் மாத்திரமின்றி உணவு மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் இல்லாததன் காரணமாகவும் பாதிப்படைகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உதவிச் செயலர் ஹோம்ஸ் நேற்று முன்தினம் நியூயோர்க் நகரில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு வலயம் அல்லது மோதல் தவிர்ப்புப் பிரதேசம் என்று ஒன்று அங்கு இல்லை.

அது கனரக ஆயுதங்களின் தாக்குதல் இடம்பெறும் தளமாகவே காணப்படுவதாக ஜோன் ஹோம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஜோன் ஹோம்ஸ், ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் வவுனியாமுகாம்களுக்குச் சென்று நேரடியாகப் பார்வையிட்டதன் பின்னர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தமொன்றினை முன் வைத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் எழுந்து விடுவர் என்ற அச்சத்தில் அந்த அறிவிப்பைப் பற்றி சிந்திக்காமலே இருக்கிறது.

அரசாங்கத்துடன் யுத்த நிறுத்தம் குறித்த இணக்கப்பாட்டுக்கு வரமுடியாமையிட்டு வருத்தமடைவதாகவும் எனினும் மோதல் பிரதேசங்களில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பின் பொருட்டும் அவர்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை விநியோகிக்கும் பொருட்டும் தொடர்ந்தும் யுத்த நிறுத்தம் ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தும் என ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மோதல் பிரதேசத்தில் கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்ததைப் போல கனரக ஆயுதங்களை பாவிக்கக் கூடாது என்பது மிகவும் முக்கியமான விடயமென ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த உறுதிமொழி தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமென நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

## சர்வதேச நாணய...

கருத்து கோணத்தை தெளிவு படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம், பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு மிகவும் குறைவான அளவிலேயே அத்தியாவ்சிய சேவைகளை வழங்கியுள்ளதாகவும் மோதல் பிரதேசங்களுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்க தவறியுள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை கடன் தொகையினை பெறுவது தொடர்பாக இலங்கையின் விசேட குழு ஒன்று அமெரிக்காவிற்கு சென்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களையடுத்து இந்த கடன் பெறல் நடவடிக்கை' இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-3,5)

## புலிகள் சரணடைவதற்கு...

நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மகிந்த இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகில் உள்ள அனைத்து தொலைக்காட்சி சேவைகளும் இப்போது எமது நாட்டின் மீதே கவனத்தை திருப்பியுள்ளன. செய்மதி தொழில்நுட்பத்தின் உதவியுடன் வன்னி நிலைமைகளை உலகம் முழுவதும் பார்க்கக் கூடியதாகவிருக்கின்றது.

இதனை பார்ப்பதற்கு சிறப்பு அவதானிகளை அனுப்பி வைக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது? இதனை ஆராய்வதற்கு சிறப்பு பிரதிநிதிகள் எதற்காக? உலகம் முழுவதற்குமே அங்கு என்ன நடைபெறுகிறது என்பது தெரியும்.

ஆனால் இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் அனைத்துலக இராஜதந்திரிகள் பலர் இவை எதனையும் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வாறு கண்மூடித்தனமாக இருப்பது அனைத்துலக அனர்த்தம் ஒன்றுக்கு இட்டுச் செல்வதாக அமையும் என்பதையிட்டு உலகத்துக்கு நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

ஈராக் எவ்வாறு குண்டு வீச்சுக்குள்ளானது என்பதை நாம் பார்த்தோம். ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வீச்சையும் நாம் பார்த்தோம். எமக்கு போதிப்பதற்காக வந்தவர்கள் ஆப்கானிஸ்தானில் எவ்வாறு குண்டு வீச்சு இடம்பெற்றது என்பதை பார்க்க வேண்டும் என மகிந்த தனது உரையில் தெரிவித்தார். (ச-5)

## வன்னி மக்களின் நிலை...

தொடர்பாக பி.பி.சிக்கு கருத்து வெளியிட்டுள்ளார். இவை தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்தக் கூட்டம் தமிழர் சமூக அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வன்னியிலிருந்து இலட்சக்கணக்காக இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களின் இன்றைய நிலை தொடர்பாகவும் அவர்களது உடனடிப் பிரச்சினைகளை எவ்வாறு கவனிப்பது என்பது தொடர்பாகவும் ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களிற்கு உடனடியாக இருப்பிடம் கொடுப்பதற்கோ, உடை, மருத்துவம், உணவு போன்றன கொடுப்பதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

அவர்கள் வன்னியில் இருந்ததை விட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். மூன்று நாட்களில் 36 பேர் முகாம்களில் இறந்திருக்கிறார்கள். 2 குழந்தைகள் உணவு வேண்டுவதற்கான நெரிசலில் சிக்கி இறந்திருக்கிறார்கள்.

இங்கு முகாம்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. முகாம்களுக்கு பொறுப்பதிகாரியாக இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் மிதிவெடிகளற்ற பிரதேசங்கள் இருக்கும் போது இவர்கள் ஏன் இவ்வளவு மைல் தூரத்திற்கு அப்பால் வவுனியாவில் தங்க வைக்கப்படவேண்டும் என்ற பிரச்சினையும் இருக்கிறது.

இந்நிலையில் இக்குழுவினர் சகல முகாம்களுக்கும் சென்று பார்த்து உண்மை நிலைவரத்தை இலங்கை அரசிற்கும் வெளிநாடுகளிற்கும் தெரிவிக்கும் பொருட்டு முகாம்களுக்கு சென்று வர அனுமதிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு ஒரு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் இருந்து, அதற்கான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என அவர் குறிப்பிட்டார். (ச-14)


**விற்பனைக்கு**

நெல்லியடியில் இயங்கி வந்த அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் தற்போது மூடப்படவுள்ளதால் அதன் விற்பனைப் பொருட்களும் கண்ணாடி அலுமாரிகளும் விற்பனை செய்யப்படவுள்ளன.

தொடர்புக்கு:- 0779810926

(C-2432)


## போர் நிறுத்தத்தை ஏற்படுத்த...

இலங்கைக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி இலங்கைக்கான மூன்று நாள் பயணத்தினை மேற் கொண்டு இன்று கொழும்புக்கு வருகிறார். கொழும்பு வரும் அகாசி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகளை சந்தித்துப் பேசுவதுடன் வவுனியாவுக்கு சென்று இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளையும் பார்வையிடுவார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள் குடியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உதவிகளை வழங்குவது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இவரது வருகையின் போது ஆராயப்பட விருப்பதாக கொழும்பில் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை மோதல்கள் தொடர்ந்து வரும் நிலையில் இலட்சக்கணக்கான மக்கள்இடம் பெயர்ந்திருக்கும் சூழ்நிலையில் அகாசியின்இலங்கை விஜயம் முக்கியமானது எனக் கருதப்படுகிறது.

இலங்கைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் மேற் கொண்டிருந்த பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் மற்றும் பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் ஆகியோர் இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மனித நேய பணியாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் போர்நிறுத்தத்துக்கான அவசியம் இல்லை என குறிப்பிட்டிருக்கும் இலங்கை அரசாங்கம், மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் மனித நேயப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கான சூழ்நிலை இல்லையெனவும் பதிலளித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீதான தாக்குதலை நிறுத்துவதற்காக ஜப்பானின் விசேட தூதுவர் அகாசியை சர்வதேச சமூகம் அனுப்பி வைப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. யசூசி அகாசி யின் பயணமும் தோல்வியில் முடிபடைந்தால் வன்னி மக்களின் அவல நிலையை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.